# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**

**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**Pleading for the restoration of pure New Testament Christianity**

Vol. 30 Oct 2017 Issue - 10


ஆசிரியர் உரை

## என்னத்தைச் செலுத்துவேன் ?

**நா**ம் ஒவ்வொருவரும் நம்முடைய அன்றாட வாழ்க்கையில், ஒரே பொருளைத் தரும் வித்தியாசமான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறவர்களாகவே உள்ளோம். ஆயினும், அப்படிப்பட்ட வார்த்தைகளை, ஒருவேளை, அது ஒரே பொருளைக் கொடுக்கக் கூடியவைகளாக இருந்தாலும், அவைகளை எல்லா இடங்களிலும் ஏகமாகப் பயன்படுத்துவதில்லை. ஏனெனில், அப்படிப் பயன்படுத்துவது சூழ்நிலைக்கு பொருத்தமானதாகவோ அல்லது பொருள் பொதிந்ததாகவோ இருக்காது. உதாரணமாக, **நீர்**, உமது மற்றும் **நீங்கள்**, உங்களுடைய போன்ற வார்த்தைகள் ஒரே பொருளைத் தருபவைகளாக இருந்தாலும், முதல் இரண்டு வார்த்தைகளை நம்மைப் படைத்த தேவனுக்கும், அடுத்த இரண்டு வார்த்தைகளை நம்மைப் போன்ற சக மனிதர்களுக்குமே பயன்படுத்துகிறோம். இப்படி வார்த்தைகளை வகைப்படுத்தி பயன்படுத்துவதை மொழி அறிவு சம்பந்தப்பட்ட ஒன்றாக நாம் கருதாமல், படைத்தவருக்குக் காட்டும் மரியாதையாகவும், அவரிடம் நாம் கொண்டுள்ள பக்திக்கு அடையாளமாகவுமே எண்ணுகிறோம்.

நமது தலைப்பில் இடம் பெற்றுள்ள செலுத்துவேன் என்ற வார்த்தையைக் கூட நாம் இந்த அடிப்படையில் தான் பார்க்க வேண்டும். அதாவது, இச்சங்கீதக்காரனால், தேவனுக்காக விசேஷமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதென்றே பார்க்க வேண்டும். ஆம், 116-ம் சங்கீதத்தின் ஆசிரியர், தேவனிடத்திலிருந்து தான் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக, ஆசீர்வாதங்களுக்காக நன்றி சொல்ல

எண்ணினபோது, என்னத்தைக் கொடுப்பேன் என்று வழக்கமான வார்த்தைகளைக் கொண்டு சாதாரணமாகச் சொல்லாமல், மரியாதையும், பயபக்தியும் கலந்த அளவில், என்னத்தைச் செலுத்துவேன் என்றே கூறியுள்ளான். அவன் தேவனுக்காகப் பயன்படுத்திய வார்த்தைகள், அவர் யார் என்பதையும், எப்படிப்பட்ட தன்மை கொண்டவர் என்பதையும் நமக்குக் காட்டுகிறது.

இப்பொழுது, நமது வழக்கத்தின்படியாக, நமது தலைப்புக்கான பின்னணி குறித்துக் கொஞ்சம் பார்த்து, பிறகு தொடருவோம்.

150 பாடல்களைக் கொண்ட சங்கீதப் புத்தகம் அனைத்தும் தாவீது அரசனாலே பாடப்பட்டது என்று பெரும்பாலோர் பொதுவாக எண்ணினாலும், உண்மையில் அவை ஏழு ஆசிரியர்களைக் கொண்டு பாடப்பட்டுள்ளது. அவர்கள் தாவீது, ஆசாப், கோராகின் புத்திரர், சாலமோன், மோசே மற்றும் எஸ்ராயர்களாகிய ஏமான், ஏத்தான் என்பவர்கள். இந்த உண்மை தெரியாமல், சங்கீதம் என்றாலே நாம் தாவீது என்று சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது. ஆயினும், கிட்டத்தட்ட பாதி சங்கீதங்களுக்கு (73) தாவீது தான் ஆசிரியர். நமது தலைப்பு இடம் பெற்றிருக்கும் 116-ம் சங்கீதத்திற்கான ஆசிரியர் யார் என்று திட்டமாகத் தெரியாவிட்டாலும், தாவீதாகத்தான் இருக்க வேண்டுமென்று ஏறக்குறைய ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இன்னும், 150 பாடல்களைக் கொண்ட சங்கீத புத்தகத்தை நாம் ஏழு பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1. போதனை சங்கீதம், 2. துதி சங்கீதம், 3. நன்றி சங்கீதம், 4. புலம்பல சங்கீதம், 5. நம்பிக்கை சங்கீதம், 6. மேசியாவைப் பற்றிய சங்கீதம், 7. ஐயோ சங்கீதம் என்று. இவற்றில் நமது தலைப்பு இடம் பெற்றிருக்கும் 116ம் சங்கீதம், நன்றி சங்கீதத்தின் கீழ் வரக்கூடிய ஒன்று. இச்சங்கீதத்தையும், வேறு சில குறிப்பிட்ட சங்கீதங்களையும், யூதர்கள் தங்களுடைய முக்கிமான பண்டிகை காலங்களிலே பாடியுள்ளதாக பிற வரலாறும், வேதாகமும் கூறுகிறது. நம்முடயை இரட்சகர் வாழ்ந்த காலத்தில் கூட இச்சங்கீதம் பாடப்பட்டதாக நம்பப்படுகிறது. குறிப்பாக, கர்த்தரின் பந்தி ஆரம்பிக்கப்பட்டபோது, ஆண்டவர் இயேசுவாலும், அவருடைய சீடர்களாலும் பாடப்பட்ட பாடல், இவைகளுள் ஒன்று என்று தான் நம்பப்படுகிறது (மத்தேயு 26:30).

இந்த 116 – ம் சங்கீதத்தின் மொழிநடையையும், குறிப்பாக கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன் என்ற வசனங்களடங்கிய

பகுதியையும், அதிலுள்ள வார்த்தைகளையும், அவைகளுக்கான அர்த்தங்களையும் நாம் கவனித்தால், இதன் ஆசிரியர் ஒரு மிகப்பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டதினிமித்தம் தேவாதி தேவனுக்கு நன்றி சொல்லிப் பாடியுள்ளார் என்று தெரிந்து கொள்ளலாம். இப்படி, ஆபத்திலிருந்து தன்னை விடுவித்த தேவனுக்கு, எப்படி நன்றி சொல்லுவதென்று தெரியாமல் தடுமாறி, தனக்குத்தானே, தன் இருதயத்தோடு பேசியுள்ளான் என்பதையும் காணமுடியும்.

சரி, இப்பொழுது, சிறப்புமிக்க இச்சங்கீதத்தின் வசனங்களிலிருந்து, நமக்கு என்னென்ன பாடங்கள் கிடைக்கிறதென்று பார்த்துப் பயனடைவோம்.

### I. கர்த்தர் நன்மைகளைச் செய்பவர் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் (வசனம் - 12 )

சங்கீதம் 116:12-13 வசனப்பகுதியிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதலாவது பாடம், கர்த்தர் நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் உபகாரங்களைச் செய்கிறவராயிருக்கிறார் என்பது.

இச்சங்கீதக்காரன், வசனம் 12 - ல், கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காவும் என்று சொல்வதின் மூலம் தன் வாழ்வில் பெற்றுக்கொண்ட எல்லா நன்மைகளுக்கும் காரணம் தேவாதி தேவன் தான் என்பதை முற்றும் முடிய ஒத்துக்கொள்கிறான். இதே கருத்தை புதிய ஏற்பாட்டில் யாக்கோபு ஆசிரியரும் கூறியுள்ளார். **நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும், யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை** என்று (யாக்கோபு 1:17). ஆனால், இவ்வழகிய கருத்து பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே இச்சங்கீதக்காரனுக்குப் புரிந்துள்ளது.

ஆனால், ஆவியானவரின் துணை கொண்டு இச்சங்கீதக்காரனால் முன்மொழியப்பட்டு, அதே ஆவியானவரால் யாக்கோபு ஆசிரியரால் வழிமொழியப்பட்டிருக்கும் இவ்வேதாகம உண்மையை நம்மில் எத்தனை பேர் அப்படியே ஏற்றுச் செயல்படுகிறவர்களாக உள்ளோம்? சொல்லுங்கள் பார்க்கலாம்! என்னுடைய வாழ்க்கையில் நான் பெற்று அனுபவிக்கிற நன்மைகள் அனைத்தும் எனக்குக் கர்த்தரால் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று நம்மில் எத்தனை பேர் நினைக்கிறோம்?

என் உழைப்பின் பலனாக இந்த உயர்வு வந்தது என்றும், என்னுடைய முயற்சியின் விளைவாக அந்த நன்மை கிடைத்தது என்றும், என்னுடைய செல்வாக்கின் காரணமாக அக்காரியம் கைகூடிற்று என்றும் தானே சொல்லுகிறோம். இன்னும், என்னுடைய அதிர்ஷ்டத்தினால் இந்த யோகம் அடித்தது என்று தானே பீற்றுகிறோம். அப்படித்தானே! ஆனால், இச்சங்கீதக்காரனோ, கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்கள் என்று கூறுகிறார். ஆம், ஒருவேளை அவை பெரியதாக இருந்தாலும், சிறியதாக இருந்தாலும், கர்த்தர் தனக்குச் செய்ததாகவே எண்ணியுள்ளான். பக்தன் யோபு கூறுவது போல், கர்த்தர் கொடுத்தார் ( யோபு 1:21 ) என்றல்லவா எண்ணியிருக்கிறான். நம்மில் எத்தனை பேர் தேவனிடத்தில் நாம் பெற்று அனுபவிக்கிற நன்மைகளுளக்காக இப்படிச் சொல்லுவதற்குத் தயாராக இருக்கிறோம்? சொல்லுங்கள்.

அன்பானவர்களே ! நம் வாழ்வில் கர்த்தர் செய்த நன்மைகளை ஒவ்வொன்றாக எண்ணிப்பாருங்கள். நாம் வாழ்வதற்குத் தேவையான பல காரியங்கள் இலவசமாகவும், சொற்ப முயற்சியாலும் கிடைப்பதால், கர்த்தர் நமக்குச் செய்யும் மேன்மைகளை நாம் யாரும் அவ்வளவாக உணருவதில்லை. உதாரணமாக, நாம் சுவாசிக்கும் காற்று, நாம் வாழ்வதற்குத் தேவையான சூரிய ஒளி, நாம் குடிப்பதற்குத் தேவையான தண்ணீரைத் தரும் மழை போன்ற இவைகளுக்காக நாம் ஒவ்வொருவரும் எவ்வளவு பணம் மாதந்தோறும் செலவிடுகிறோம்? இன்னும், தேவன் நமக்குக் கொடுக்கும் பெலனைக் கொண்டு உழைத்துப் பெற்றுக்கொள்ளும் உணவு, உடை, இருப்பிடம் போன்றவைகளுக்காக நாம் தேவனுக்கு என்ன கைம்மாறு செய்கிறோம்? தேவன் நம்முடைய வாழ்வில் செய்யும் நன்மைகளுக்கு நாம் நன்றியுடையவர்களாய் இருக்க வேண்டுமென்றே எதிர்பார்க்கிறார். பத்து குஷ்டரோகிகளை குணமாக்கின இயேசு, ஒருவன் மாத்திரம் திரும்பி வந்த போது, மற்ற ஒன்பது பேர் எங்கே என்று கேட்டது உங்களுக்கு மறந்து போய்விட்டதா ? (லூக். 17:17).

இங்கே, தேவன் மனிதனுக்குச் செய்திருக்கும் நன்மைகளில் மிகப்பெரிய நன்மையை என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியாது. யோவான் 3:16 -ம் வசனம் சொல்லுவதைக் கவனியுங்கள். தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படி அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். ஒரு வேளை, அவர் நம் வாழ்வில் செய்த மற்ற நன்மைகளை நாம் மறக்கிறவர்களாக

இருந்தாலும், தம்முடைய ஒரே பேறான குமாரனை நமக்குத் தந்த நன்மையை யாராவது மறக்கலாமா? நிச்சயமாக மறக்கக்கூடாது. குமாரனாகிய இயேசுவுக்கும், அவரை அனுப்பின தேவனுக்கும் நாம் என்றென்றும் நன்றியுடையவர்களாகவும், உண்மையுடையவர்களாகவும் இருப்பது இப்பூமியில் பிறந்து வாழும் ஒவ்வொருவரின் கடமை. இதை நாம் யாரும் மறந்துவிடக்கூடாது.

### II. அவருக்கு எதையாவது செலுத்தவேண்டும் ( வசனம் - 12 )

சங்கீதம் 116 : 12-13 வசனங்களிலிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாவது பாடம். அவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் நன்மைகளுக்காக நாம் எதையாகிலும் செலுத்தவேண்டுமென்பது.

சர்வ வல்ல தேவனிடத்திலிருந்து பெரிய அளவில் நன்மைகளைப் பெற்றுக்கொண்ட இச்சங்கீதக்காரன், நம்மில் அநேகரைப்போல் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு போகிறபோக்கில் ஒரு நன்றி சொன்னால் போதுமென்று எண்ணாமல், பெற்றுக்கொண்டவைகளுக்கு ஈடாக அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்? என்று எண்ணி மலைத்துள்ளான்!

என்னத்தைச் செலுத்துவேன்! என்று இவன் மலைத்து நின்று சொன்னது, இவன் மனநிலை பற்றி நமக்கு இரண்டு காரியங்களைச் சொல்லுகிறது. முதலாவது, பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு ஈடாகச் செலுத்துவதற்கு என்னிடத்தில் ஒன்றுமே இல்லையே என்று குமுறுவது. இரண்டாவது, பெற்றுக்கொண்ட நன்மைகளுக்குப் பதிலாக என்னிடத்தில் இருப்பதில் எதைச் செலுத்தினால் கொஞ்சமாகிலும் கிட்ட நெருங்கும் என்று எண்ணித் தவிப்பது.

தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்பவைகளுக்கு ஈடாக, நாம் எதையும் ஒருபோதும் செய்துவிட முடியாது என்பது உண்மையே. ஆனாலும், நான் பெற்று அனுபவிப்பவைகளுக்காக, எதையாகிலும் செலுத்த வேண்டுமென்ற எண்ணமுடையவர்களாக இருப்பது மிகமிக அவசியம்.

அப்போஸ்தலனாகிய பவுலைப் பாருங்கள். தன்னுடைய பழைய வாழ்க்கை பற்றிக் கூறும்போது, முன்னே நான் தூஷிக்கிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன் என்று கூறுகிறான் (1 தீமோ. 1:13). அப்படிப்பட்ட பவுலை, கிறிஸ்து, அவன் தமஸ்கு செல்லும் வழியில் சந்தித்துப் பிடித்தார் (அப். 9:3-6). அவன் அனனியாவால் உபதேசிக்கப்பட்டு பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம்

பெற்றுக்கொண்டான் (அப்.22:16 ). பிறகு, இந்தப் பவுல், பிலிப்பி பட்டணத்து சபையாருக்கு நிருபம் எழுதும்போது, **நான் அடைந்தாயிற்று அல்லது முற்றிலும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்படேனோ அதை நான் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன் பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடுகிறேன்....** ( பிலி. 3 :12, 13 ) என்று கூறுகிறான். ஆம், தன்னைச் சந்தித்த இயேசுவுக்காக, தான் இரட்சிக்கப்பட்ட நற்செய்தியை நல்கிய இயேசுவுக்காக, எந்தளவு நன்றியுடைவனாயிருந்து தன் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளான் என்று பாருங்கள். இன்னும், **கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்** (பிலி. 1: 21) என்று சொல்லும் அளவுக்கு தன் நன்றியை கிரியைகளினால் காட்டியுள்ளான் என்பதையும் கவனிக்கத் தவறிவிடாதீர்கள்.

அருமையானவர்களே! நாம் பார்க்கும் இந்தப் பழைய ஏற்பாட்டு சங்கீதக்காரன் போலவும், நம்முடைய புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலன் பவுல் போலவும் நாம் தேவனுக்காக,கிறிஸ்துவுக்காக, அவர்களிடத்திலிருந்து நாம் பெற்றுக்கொண்ட சரீர நன்மைகளுக்காக மற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக எதையாகிலும் செலுத்த வேண்டுமென்ற எண்ணமுடையவர்களாக இருக்கிறோமா? ஒருவேளை, இதுகாறும் அப்படிப்பட்ட எண்ணமில்லாதவர்களாக இருந்திருப்போமானால், சரி, போகட்டும், இனிமேலாகிலும், தேவனுக்குச் செலுத்த வேண்டியவைகளைச் செலுத்துகிறவர்களாக இருப்போம். நம்முடைய இரட்சகர், இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்று நமக்குச் சொல்லியுள்ளதை நாம் கண்டிப்பாக மறக்கக்கூடாது (மத்தேயு 22:21).

### III. இரட்சிப்பின் பாத்திரம் எடுத்துக்கொள்ள வேண்டும் (வசனம்- 13)

சங்கீதம் 116 : 12-13 வசனப்பகுதியிலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு முக்கியமான பாடம், இரட்சிப்பின் பாத்திரம் எடுத்தக்கொள்ள வேண்டும் என்பது.

கர்த்தர் செய்த உபகாரங்கள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக எண்ணி, அதற்கு நன்றியாக எதைச் செலுத்தினால் சரியாக இருக்குமென்று மூளையை கசக்கிப் பிழிந்து, எதையும் முடியாத நிலையில் எப்படியோ ஒரு தீர்மானத்திற்கு வந்து சேர்ந்தான் நம் சங்கீதக்காரன். அந்த அரிய தீர்மானம் தான், **இரட்சிப்பின் பாத்திரம் எடுத்துக்கொள்வேன்** என்பது. ஆஹா! எப்படிப்பட்ட ஒரு தீர்மானம்! வேறு என்ன தீர்மானம் எடுத்திருந்தாலும் இதற்கு ஈடாகுமா அல்லது இணைதான் ஆகுமா? முடியவே முடியாது. சங்கீதகாரனே, சபாஷ்! சரி, இவன் மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தவனாதலால், இரட்சிப்பின் பாத்திரம் என்பது, அன்றைய கால கட்டத்தில் பிரமாணங்களினடிப் படையில் தேவன் கட்டளையிட்டிருக்கும் அல்லது எதிர்பார்க்கும் மார்க்க

கடமைகளைச் செய்ய தன்னை ஒப்புக்கொடுப்பது தான். ஆம், இச்சங்கீதக்காரன், பொன்னைக் கொடுக்கலாமா, பொருளைக் கொடுக்கலாமா, இதைக் கொடுக்கலாமா, அதைக் கொடுக்கலாமா என்று குழம்பிப்போய், இறுதியில் தனக்கிருக்கும் ஒரே இரட்சிப்பின் பாத்திரம் என்று கண்டு கொண்டான்.

தான் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக இந்தப் பழைய ஏற்பாட்டு பக்தன், இரட்சிப்பின் பாத்திரம் எடுப்பேன் என்று தீர்மானித்து வாழ்ந்திருக்கும் போது, புதிய ஏற்பாட்டின் கீழாக வாழ்ந்து, அவனைக் காட்டிலும் மிக அதிகமான ஆவிக்குரிய நன்மைகளைப் பெற்று அனுபவிக்கும் சிலாக்கியமுள்ள நாம், இரட்சிப்பின் பாத்திரம் எடுத்தவர்களாக நம்முடைய வாழ்க்கையை நடத்துவது எவ்வளவு அவசியம் என்று எண்ணிப்பாருங்கள். இச்சங்கீதத்தின் ஆசிரியர், தாவீது என்று நம்பப்படுவதாலும், அவன் ஒரு அரசனாக இருந்தானென்பது உண்மையாக இருப்பதாலும், அவனுக்கு முன்பாக வேறு பல பாத்திரங்களும் நிச்சயமாக இருந்திருக்கும். அதாவது, உலக இன்பம் என்ற பாத்திரம், சர்வாதிகாரம் என்ற பாத்திரம் என்று பலபாத்திரங்கள் இருந்திருக்கும். ஆனால், இவனோ, பெத்தானியா கிராமத்து மரியாள் போல, தேவையானது ஒன்றே என்று தீர்மானித்து (லூக்கா 10:42) இரட்சிப்பின் பாத்திரம் எடுத்துக்கொண்டான்.

அருமையானவர்களே! நம்மில் எத்தனைபேர் இந்த இரட்சிப்பின் பாத்திரம் எடுத்து வாழத் தயாராக இருக்கிறோம்? இந்த இரட்சிப்பின் பாத்திரத்தை நாம் ஒவ்வொருவரும் எடுக்க வேண்டுமென்பது தேவசித்தமாக இருக்கிறது (1தீமோத். 2:4 ). மேலும், எபிரெயர் ஆசிரியர், இந்த இரட்சிப்பின் பாத்திரத்தை நாம் எடுக்காவிட்டால் தண்டனைக்குத் தப்பமுடியாது என்று நம்மைக் கடுமையாக எச்சரிக்கிறார். ஏனெனில், தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க, முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடை சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம் (எபி.2:2-4) என்று.

எப்படி இந்த சங்கீதக்காரனை, கடுமையான சரீரச் சூழ்நிலையிலிருந்து தேவன் விடுவித்தாரோ, அதுபோலவே, நம் ஒவ்வொருவரையும் பாவத்தின் கோரப்பிடியிலிருந்து விடுவிக்கப்படும்படியான சகல காரியங்களையும் நமக்குக் கூட்டி வழங்கியுள்ளார். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய

தேவத்துவத்துள் உள்ள மூவரும், நாம் இரட்சிக்கப்படும்படி தங்கள் பங்கை செய்துள்ளனர். ஆம், பிதாவாகிய தேவன் தமது ஒரே பேரான குமாரனை நமக்காகத் தந்துள்ளார் (யோவான் 3:16) குமாரனாகிய கிறிஸ்து தன்னுடைய உயிரையே நமக்குத் தந்துள்ளார் (எபே.5:2) பரிசுத்த ஆவியானவர் வேதவசனங்களை நமக்குக் கொடுத்துள்ளார் (யோவான் 14:26, 16:13 ) அப்படியானால், இதற்குக் கைமாறாக, நாம் இரட்சிப்பின் பாத்திரம் எடுக்க வேண்டியது அவசியமா, இல்லையா? நீங்களே சொல்லுங்கள். சரீர நன்மைகளைப் பெற்ற சங்கீதக்காரனுக்கே அது அவசியமானால், சரீர நன்மைகளையும், ஆவிக்குரிய நன்மைகளையும் ஒருங்கே பெற்ற நமக்கு அது எவ்வளவு அவசியம் என்று தயை கூர்ந்து சிந்தித்துப் பாருங்கள்.

இதை வாசிக்கும் அருமையான நண்பரே, ஒருவேளை, உங்களில் யாராவது, கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசப்படி இரட்சிப்பின் பாத்திரம் எடுக்காதவர்களாக இருந்தால், உடனடியாக நீங்கள் இரட்சிப்பின் பாத்திரம் எடுக்கும்படி உங்களை ஊக்கப்படுத்துகிறேன். **இதோ, இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்** என்றே, தேவன் பவுலடியாரைக் கொண்டு சொல்லியுள்ளார் (2கொரி. 6:2). ஆகவே, நாம் காலம் தாழ்த்தக் கூடாது. அப்படித் தாழ்த்துவது தேவ ஆலோசனைக்கு விரோதமானது.

ஒருவேளை, இரட்சிப்பின் பாத்திரத்தை நான் ஏற்கனவே எடுத்துவிட்டேன் என்று நீங்கள் சொல்கிறவர்களாக இருந்தால், உங்களுக்கு ஒன்றை நினைவுபடுத்துகிறேன். நீங்கள் எடுத்திருக்கும் பாத்திரம், இயேசுவால் கொடுக்கப்பட்ட புதிய ஏற்பாடு உபதேசங்களின்படி சரியாக இருக்கிறதா என்று சோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில், நம்முடைய இறுதி நியாயந்தீர்ப்பு வசனத்தினடிப்படையில் தான் இருக்கப்போகிறது. இயேசு ஆண்டவர் **நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்** (யோவான் 12:48) என்று கூறியுள்ளார். ஆகையால், நம்முடைய இரட்சிப்பு விசுவாசித்துப் பெற்றதாக (மாற்கு16:16) பாவ வாழ்க்கையிலிருந்து மனந்திரும்பிப் பெற்றதாக (அப்.2:38) இயேசு தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டுப் பெற்றதாக (அப். 8:37 ) பாவமன்னிப்புக்காக தண்ணீரில் மூழ்கிப் பெற்றதாக (அப்.22:16) இருக்க வேண்டும். இதற்கு மாறான எந்தவொரு உபதேசமும், எப்படிப்பட்ட அனுபவமும் புதிய ஏற்பாட்டு உபதேசப்படியான இரட்சிப்பாக இருக்க முடியாது.

அன்பானவர்களே! தேவனிடத்திலிருந்து நாம் பெற்றுக் கொண்டவைகளுக்குப் பதிலாக ஒன்றைச் செலுத்துவதற்கு இரட்சிப்பைக் காட்டிலும் சிறந்தது வேறெதுவுமில்லை. இரட்சிப்படைந்து, கர்த்தரால், அவருடைய சபையில் சேர்க்கப்பட்டு ( அப். 2:47 ). நித்திய வாழ்விற்கான உத்திரவாதம் பெறுங்கள். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!! ★

# பெந்தேகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றவர்கள் யார்?

Bro. J.C. சோட்

இது ஒரு முக்கியமான கேள்வி, ஏனென்றால், அப்போஸ்தலருடைய நடபடிகள் 1-ம் அதிகாரம் 15-ம் வசனத்தில் காணப்படும். 120 சீடர்களும், மற்றும் அப்போஸ்தலர்களும் பரிசுத்த ஆவியானவரின் அற்புத வல்லமைகளைப் பெற்றனர் என்ற ஒரு தவறான நம்பிக்கையில் பெரும்பாலான கிறிஸ்தவ சமுதாயம் உள்ளது.

நாம் முந்தைய பாடங்களில் பார்த்தது போல, கிறிஸ்து தேற்றரவாளனை அல்லது பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே வாக்களித்தார் (யோவான்14:26). அனைவருக்கும் அனுப்புவதாக அல்லது பொதுவான வாக்குத்தத்தம் எதையும் அவர் அளிக்கவில்லை. அடுத்து, உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என தமது அப்போஸ்தலர்களை இயேசு கேட்டுக்கொண்டார் (லூக்கா 24:49). அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்ட பின்னர், அவர்கள் எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், அவருக்குச் சாட்சியாக இருப்பார்கள் என்றார் (அப்.1:8). மீண்டும், இவ்வாறாக அப்போஸ்தலர்களிடம் மட்டுமே பேசினார். சீடர்கள் யாரிடமும் பொதுவாகப் பேசவில்லை. எனவே அப்போஸ்தலருடைய நடபடிகள் 1,2 அதிகாரங்களுக்கு நாம் வரும்போது, அங்கு நடந்தவை அனைத்தையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 1-ம் அதிகாரத்தின் முற்பகுதியில் கிறிஸ்து பரலோகத்திற்கு எவ்வாறு எடுத்துக்கொள்ளப்பட்டார் என்பதை லூக்கா விளக்கிக் கொண்டிருக்கிறார். இயேசுவானவர் தாம் தெரிந்த கொண்ட அப்போஸ்தருக்குப் பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்ட பின்பு, – நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார். அன்றியும், அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும்போது, அவர்களை நோக்கி : யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான் : நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார் (அப். 1:1-5 ). இப்போது இந்த விவரங்களை நீங்கள் படிக்கும்போது, அவர் தாம் தேர்ந்தெடுத்த அப்போஸ்தலர்களிடம்

மட்டுமே பேசிக்கொண்டிருந்தார் என்பதைத் தெளிவாகக் காணமுடியும். எருசலேமில் அவர்களைத் தங்கியிருக்கும்படியும், சில நாட்களில் பரிசுத்த ஆவியை அவர்கள் பெறுவார்கள் என்றும் அவர் கூறினார். யோவான் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்ததையும் அவர்களோ பரிசுத்த ஆவியால் திருமுழுக்குப் பெறுவார்கள் என்பதையும் அப்போஸ்தலர்களுக்கு அவர் நினைப்பூட்டினார். அப்படியானால், கர்த்தர் யாரிடம் பேசிக்கொண்டிருந்தார் என்பதிலே சந்தேகம் இருக்கிறதா? நிச்சயமாக, அப்போஸ்தலர்களிடம் மட்டுமே பேசிக்கொண்டிருந்தார். அவர்களுக்கு மட்டுமே பரிசுத்த ஆவியின் திருமுழுக்கை வாக்களித்தார். ஆனால், மீண்டுமாக நீங்கள் உன்னிப்பாகக் கவனிக்கும்போது, கர்த்தர் அப்போஸ்தலர்களிடம் மட்டுமே பேசிக் கொண்டிருந்தார் என்பதையும், அவர்களைப் பற்றியும் பல சந்தர்ப்பங்களில் கீழ்க்கண்டவாறு பேசினார் என்பதையும் நீங்கள் காண்பீர்கள். அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும் போது...எருசலேமை விட்டு போகாமல்...காத்திருங்கள் என்று கட்டளையிட்டார். நீங்கள் பரிசுத்த ஆவியினாலே திருமுழுக்குப் பெறுவீர்கள் என்றும் அவர் சொன்னார். எனவே, நீங்கள், அவர்கள் என்றெல்லாம் அவர் அழைப்பது அப்போஸ்தலர்களை மட்டுமே என்பதைக் காண்க. அந்த சந்தர்ப்பங்களில் மட்டுமின்றி, அப்போஸ்தலருடைய நடபடிகள் 1,2 அதிகாரங்கள் முழுவதும் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 1-ம் அதிகாரத்தின் பிற்பகுதியில், கர்த்தரைக் காட்டிக் கொடுத்து, தற்கொலை செய்து கொண்ட யூதாசுக்குப் பதிலாக சீடர்களிடமிருந்தும், அங்கு கூடியிருந்த 120 பேர்களிடமிருந்தும் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் பணியில் அப்போஸ்தலர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். யோவான் திருமுழுக்கு கொடுத்து வந்த நாள் முதற்கொண்டு கர்த்தராகிய இயேசுவானவர் உயர எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் வரைக்கும், அவர் அப்போஸ்தலர்களுடன் சஞ்சரித்த காலங்களிலெல்லாம் அவர்களுடனேகூட இருந்த மனிதர்களில் ஒருவனே அப்போஸ்தலனாகத் தகுதி பெற்றவன் என்பதைக் காண்கிறோம். வேறுவிதமாகக் கூறினால், கர்த்தர் உயிரோடு எழுந்ததை அப்போஸ்தலர்களுடனே கூட சாட்சி சொல்லுகிறவனாக இருக்க வேண்டும். **அப்பொழுது அவர்கள் யுஸ்து என்னும் மறுநாமமுள்ள பர்சபா என்னப்பட்ட யோசேப்பும், மத்தியாவும் ஆகிய இரண்டு பேரையும் நிறுத்தி : எல்லாருடைய இருதயங்களையும் அறிந்திருக்கிற கர்த்தாவே, யூதாஸ் என்பவன் தனக்குரிய இடத்துக்குப் போகும்படி இழந்துபோன இந்த ஊழியத்திலும் இந்த அப்போஸ்தலப் பட்டத்திலும் பங்கு பெறுவதற்காக, இவ்விரண்டுபேரில் தேவரீர் தெரிந்து கொண்டவனை எங்களுக்குக் காண்பித்தருளும் என்று ஜெபம் பண்ணி; பின்பு, அவர்களைக் குறித்துச் சீட்டுப்போட்டார்கள்; சீட்டு**

மத்தியாவின் பேருக்கு விழுந்தது; அப்பொழுது அவன் பதினொரு அப்போஸ்தலருடனே சேர்த்துக்கொள்ளப்பட்டான் (அப். 1:23 -26).

இப்போது, சீடர்களிடமிருந்து இருவரைத் தேர்ந்தெடுத்து அவர்களில் ஒருவரை அப்போஸ்தலனாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் யார்? சந்தேகமின்றி, அப்போஸ்தலர்கள் தான். அப்போஸ்தலனாகத் தகுதியுள்ளவனைத் தேர்ந்தெடுக்கும்படி தங்களுக்குக் காட்ட, கர்த்தரிடம் ஜெபம் செய்து சீட்டு போட்டுப் பார்த்தவர்கள் யார்? மீண்டும், அவர்கள் அப்போஸ்தலர்கள் தான் என்பதே பதில். மத்தியா தேர்ந்தெடுக்கப்பட்டபின், யாரோடு சேர்த்துக் கொள்ளப்பட்டான்? வசனம் கூறுவது போல, பதினொரு அப்போஸ்தலர்களுடனே சேர்த்துக் கொள்ளப்பட்டு, இப்பொழுது அவர்கள் பனிரெண்டு அப்போஸ்தலர்கள் ஆயினர். எனவே, சங்கிலித் தொடர் போன்று நடைபெற்ற சகல காரியங்களும், அப்போஸ்தலர்களுடன் சம்பந்தப்பட்டவைகளாகவே இருந்திருக்கின்றன. ஆம், அவை அனைத்தும் அப்போஸ்தலர்களையே குறிக்கின்றன.

இப்போது, நாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் 1-ம் அதிகாரத்தின் இறுதிக்கு வந்துவிட்டதைக் கவனியுங்கள். தொடர்ந்து 2-ம் அதிகாரத்திற்குச் செல்லவிருக்கிறோம். ஆனால், மூல கையெழுத்துப் பிரதி அதிகாரங்களாகவும், வசனங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை அறியுங்கள். எனவே, எண்ணங்களும் செயல்பாடுகளும் தொடர்ச்சியாகவே வந்த வண்ணமிருந்தன. ஆகவே, அப்போஸ்தலர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தால் அவைகளைத் தொடர்ந்து நாம் படிப்போம் : பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒரு மனப்பட்டு, ஓரிடத்திலே வந்திருந்தார்கள் (அப்.2:1). இப்பொழுது, இங்கு பேசப்படுவோர் அப்போதலர்களாக மட்டுமே இருந்தால், பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்கள், அதாவது அப்போஸ்தலர்கள், ஒரு மனப்பட்டு ஓரிடத்தில் கூடியிருந்தனர் என்று காண்கிறோம். தொடர்ந்து வசனம் கூறுகிறது அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று ( அப். 2:2 ). இந்த முழக்கம் யார் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று? அப்போஸ்தலர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பியது. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலக் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்கு அதாவது, அப்போஸ்தலர்கள் எல்லாரும், பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்கு அதாவது, அப்போஸ்தலர்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள் (அப். 2:3,4).

பின்னர், பேதுரு பதினோரு பேருடன் கூட நின்று உரத்த சத்தமாய் பேசினான். இந்த 11 பேரும் யார்? அப்போஸ்தலர்கள் தான். மேலுமாக, பேதுரு விளக்கினான்; இந்த மனிதர்கள், ( அப்போஸ்தலர்கள் ) மது அருந்தியிருக்கவில்லை; ஆனால், யோவேல் தீர்க்கதரிசியால் கூறப்பட்டது போல கடைசி நாட்களில் மாம்சமான யாவர் மேலும் தேவன் தமது ஆவியை ஊற்றுவார் ( அப். 2:14 -17 ). அதை அவர் செய்தாரா? ஆம். தமது ஆவியின் வித்தியாசமான அளவுகளைப் பலருக்கும் அளித்தார். அப்போஸ்தலர்களுக்குப் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைக் கொடுத்தார். பின்னர், தேர்ந்தெடுக்கப்பட்ட சீடர்களின் மேல் அப்போஸ்தலர்கள் கைகளை வைத்து, அப்போஸ்தலருடைய நடபடிகள் 6ம் அதிகாரத்தில் வர்ணிக்கப்பட்டிருப்பது போல, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை அவர்களுக்குக் கிடைக்கச் செய்தார். இறுதியாக, மற்ற யாவரும், நமது காலம் வரையிலும் கூட, கர்த்தருக்குக் கீழ்ப்படியும்போது பரிசுத்த ஆவியனவரின் கனிகளை அல்லது அற்புதம் செய்ய இயலாத அளவிலான பரிசுத்த ஆவியனவரின் கனிகளை அல்லது அற்புதம் செய்ய இயலாத அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுகின்றனர். ( அப். 2:38 ). அது மட்டுமில்லாமல், அப்போஸ்தலருடைய நடபடிகள் 2ம் அதிகாரத்தைத் தொடர்ந்து படித்தால், அன்றைய தினத்தில் அங்கு கூடியிருந்தவர்களுக்கு அப்போஸ்தலர்கள் நற்செய்தியைப் போதிக்க, ஏறக்குறைய மூவாயிரம் பேர் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, பாவ மன்னிப்பும் பெற்று, பரிசுத்த ஆவியானவரின் கனிகளையும் பெற்றனர் என்பதையும், கர்த்தர் தமது சபையிலே அவர்களை சேர்த்துக் கொண்டார் என்பதையும் நாம் பார்க்கிறோம். அதே அதிகாரத்தில், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய் தரித்திருந்தார்கள் என்றும், அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

எனவே, எல்லா முக்கியத்துவங்களும் அப்போஸ்தலருக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டுள்ளதைக் காணமுடியும். ஏனெனில், அவர்கள் மாத்திரமே பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருந்தனர். ஒருவேளை நூற்றிருபது பேரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருந்தால், இன்னும் ஒருவேளை, மூவாயிரம் பேரும் திருமுழுக்கைப் பெற்றிருந்தால், அங்கு நடந்ததைவிட பெரிய அளவிலான அற்புதங்களும் அடையாளங்களும் நிகழ்ந்திருக்கும். மேலும், அவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்று, அற்புதங்கள் செய்யும் வல்லமையையும் பெற்றிருந்தால், அப். நடபடிகள் 6-ம் அதிகாரத்தில் காணப்படுவது போல, சீடர்களில் 7 பேரை தேர்ந்தெடுத்து அப்போஸ்தலர்கள் அவர்கள் மேலே கையை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையை அவர்களுக்கு அளிக்க வேண்டிய அவசியம் என்ன? இவை அனைத்தையும் சிந்தித்துப் பாருங்கள். உண்மை பளிச்சென்று உங்களுக்குத் தெரியும். ★

# பொன்னைப் பார்க்கிலும் விலையேறப்பெற்றது.

Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே, தாய்மார்களே இம்மாதமும் இத்தலைப்பின் கீழாக நாம் சந்திக்கக்கிருபை செய்த தேவனுக்கு கோடான கோடி

பொன்னை விட விலையேறப்பெற்ற ஒரு பொக்கிஷத்தைப் பெற்றுக்கொள்ள நமக்கு விருப்பமா? அப்படியானால், அப்படி என்ன பொக்கிஷம் அது? பரீட்சை பார்க்கப்பட்டும், சோதிக்கப் பட்டும் கிடைக்கக்கூடிய விசுவாசமே அந்தப் பொக்கிஷம். நெருப்பு ஆலைக்குள் சென்று புடமிடப்படும்போது தான் அழுக்குகள் நீங்கிய சுத்த பொன் கிடைக்கிறது. மிகக் கடுமையான சோதனைக்குள் சென்று வெளியே வரும்போதுதான் விலையேறப் பெற்ற விசுவாசமானது பரிசுத்தமாயும், பலமுள்ளதாயும் இருக்கிறது. எல்லோருமே இந்தப் பொக்கிஷத்தை அடைந்துகொள்ள விரும்புகிறோம். ஆனால், தேவையான பரீட்சைக்குட்பட வேண்டி வரும்போது நம்மை அதிலிருந்து ஒதுக்கிக்கொள்ள முயற்சிக்கிறோம்.

அப்போஸ்தலன் பேதுரு சக கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள் என்றாலும் துன்பப்பட வேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்ச காலம் பல விதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள் அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும் அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும் (1பேதுரு1:6,7). பேதுருவின் கருத்தை அப்படியே கூறும் வகையில் பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகமாகிய மல்கியாவில் பார்க்கும் போது, அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக் கொண்டிருப்பார். அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கும்படிக்கும், நீதியாய்க் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப் போலவும் வெள்ளியைப் போலவும் புடமிடுவார் (மல்கியா 3:3).

நெருப்பினால் பொன் சுத்தமாக்கப்பட்டாலும் அது சோதிக்கப்படவும் வேண்டியதாயிருக்கிறது. பிரச்சனையான நேரங்களில் தான் மனிதன் யார் என்பது வெளிப்படுகிறது. ஆபத்துக் காலங்களில் நீ சோர்ந்து போவாயானால், உன் பெலன் குறுகினது (நீதி. 24:10) என்று ஞானி கூறுகிறார். பிரச்சனையான நேரங்களில் தான் தேவனுடைய பிள்ளைகள் சுத்திகரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற முடியும்.

பிரச்சனையான சமயத்தை எப்படிப் பயன்படுத்திக் கொள்வது? உலகம் இன்றைக்கு, இதற்குப் பல விளக்கங்களும், வழிமுறைகளையும் கொடுத்தாலும் இயேசு கிறிஸ்து கொடுக்கும் விளக்கமே ஒரு தனிசிறப்புடையது. ஒருவன் சுத்திகரிக்கப்படுவதற்கும், தேவனண்டையிலே ஒருபடி கிட்டிச்சேர்வதற்கும் உதவியாயிருக்கும் ஒரு மாபெரும் ஆசீர்வாதம் சோதனை. பிரச்சனையான நேரங்களில் நாம் தேவனை மட்டும் சார்ந்திருக்கும் ஒரு சிலாக்கியம் கிடைக்கிறது. எப்போதுமே வசதியான சூழ்நிலையில் இருக்கும்போது நாம் ஒரு போதும் தேவன் மீது விசுவாசம் என்பதை பற்றி கற்றுக் கொள்ளவே முடியாது. பேதுரு கடலில் அமிழும்போது ஆண்டவரே, என்னை இரட்சியும் என்று கதறினான்(மத்தேயு 14:20). ஒருவேளை அவன்சுலபமாய் கடலில் நடந்திருப்பானானால், தன்னுடைய ஒரே நம்பிக்கை, தனக்கு ஒரே அனுக்கிரகம் அவர் தான் என்பதை உணர அவனுக்கு சந்தர்ப்பம் கிடைக்காமல் போயிருக்கும். அப்போஸ்தலனாகிய பவுலும் கொரிந்தியருக்கு எழுதும்போது பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப் போகத்தக்கதாக எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. மரித்தோரை எழுப்புகிற தேவன் மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக இப்படிப்பட்ட பாடுகள் என்று கூறுகிறார் (2 கொரி. 1:8-10).

நாம் சோதனையினூடே செல்லும் போது பரிசுத்த தேவனுடைய சித்தத்திற்கு நம்மை கீழ்ப்படுத்துகிறோம். நமதாண்டவர் இயேசு கிறிஸ்துவே பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார் (எபி. 5:8) என்று வாசிக்கிறோம். அவருக்கே பாடுகள் அவசியமாய் இருந்ததென்றால் எனக்கும், உங்களுக்கும் எவ்வளவு அதிகம். அதை விடுத்து அவருடைய சித்தத்திற்கு மாறாக துணிந்து செயல்படக்கூடாது.

சில நேரங்களில் நாம் சில தவறான காரியங்களை நம் வாழ்வில் நடக்க அனுமதிப்போம். தேவன் அப்படியே நம்மை ஓர் அசை அசைத்து நாம் நலமானதைக் காணவும், அவர் விரும்புகிறதை

ஏற்றுக்கொள்ளவும் செய்வார். இதைத் தன் சொந்த வாழ்க்கையில் அனுபவித்த பக்தன் யோபு நான் சுகமாய் வாழ்ந்திருக்கிறேன். அவர் என்னை நறுக்கி என் பிடரியைப் பிடித்து, என்னை நொறுக்கி, என்னைத் தமக்கு இலக்காக நிறுத்தினார் (யோபு. 16:12) என்று கூறுகிறார்.

அப்படியே யோனா தேவனுக்கு விரோதமாய் தன் பயணத்தைத் தொடர்ந்தபோது, தேவன் அவனை மீன் வயிற்றிற்குப் போகச்செய்து, பிறகு சரியான பிரயாணத்தை மேற்கொள்ள உதவி செய்தார். பிரசங்கி 7-14-ல் பார்க்கும் போது, வாழ்வு காலத்தில் நன்மையை அனுபவித்திரு. தாழ்வு காலம் என்று கூறும்போது சுகவீனம், துக்கம், பொருளாதார பின்னடைவு போன்றவைகளைக் கூறலாம். சுகவீனத்தின் மூலம் வலி, வேதனைகள் இருக்கும்போது அதன் மூலம் பொறுமை, தைரியம், நம்பிக்கை இவைகளை வளர்த்திக் கொள்ளலாம்.

இழப்புக்கள் போன்ற துயரமான நேரங்களில் இப்பூவுலகு நிலையற்றது என்று உணர முடியும். பரலோகத்தில் நமக்குப் பிரியமானவர் இருக்கும் போது அங்கே செல்ல நாம் ஆயத்தமாவோம். பணத்தை இழந்து பொருளாதார அடியை ஒருவன் வாழ்வில் சந்திக்கும் போது தன் குணாதிசயங்களை நன்றாகக் கட்டிக்கொள்ள அது வாய்ப்பாக அமையும். துயரங்கள் என்ற மழைதான் ஆவியின் கனிகளை உண்டு பண்ணச் செய்யும். இயேசு கிறிஸ்து இது பற்றி கூறும் போது, கனிகொடுக்கிற கொடி எதுவோ அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி அதைச் சுத்தம் பண்ணுகிறார் (யோவான் 15:2).

கஷ்டமான நேரங்களில் தாழ்மையை நாம் அணிந்து கொள்கிறோம். தாழ்மைக் குணம் நம்மை இயேசுவண்டை கொண்டு செல்கிறது. மனிதர்களிடமும் சுமூகமாக நடக்க உதவுகிறது. பவுல் தன் அனுபவத்தில் கூறும்போது நான் என்னை உயர்த்தாதபடிக்கு என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னை நான்உயர்த்தாதபடிக்கு அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது (2கொரி.12:7) என்கிறார்.

அது மட்டுமல்ல சோதனைகள் மூலம் பொறுமையைக் கற்றுக் கொள்கிறோம். உபத்திரவம் பொறுமையை உண்டாக்குகிறது (ரோமர் 5:3 ). பொறுமையை பல விளக்கங்கள் மூலம் விளக்கலாம். நீண்ட சகிப்பு, அதிவேகமாக செயல்பட நம் சரீரம் ஒத்துழைக்கும்போது நம் எண்ணங்களை அப்படியே அமைதிப்படுத்துவது. மேதையை உருவாக்குவதற்குப் பொறுமை

தேவை; இந்த பொறுமைமையானது ஏதோ கடையில் விற்கும் ஒன்றல்ல. இதை நாம் கற்றுக் கொண்டு பெற வேண்டும்.

வேதத்திலே பொறுமைக்கு உதாரணமாக யோபுவை கூறுவோம். புதிய ஏற்பாடு யோபுவைப் பற்றி கூறும் போது இதோ பொறுமையாயிருக்கிறவர்களை பாக்கியவான்களென்கிறோமே. யோபின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள் (யாக்கோபு 5:11) என்று பார்க்கிறோம். யோபைக் காட்டிலும் பொறுமையாய் வேறு யாராலும் இருக்க முடியாது. பல கேள்விகளைத் தானே கேட்டுக் கொண்டான். அதன் மூலம் விசுவாசத்தைப் பெற்றுக்கொண்டான். இப்போது என் கண்கள் காண்கிறது என்கிறான். புரிந்து கொள்ளுதலைப் பல கேள்விகளுக்குப் பிறகுதான் பெற்றுக் கொள்கிறான். நாமும் கூட பல சமயங்களில், வாசித்த வசனங்களை பலமுறை வாசித்திருந்தாலும் சோதனையான நேரங்களில் அந்த வசனங்கள் புதுபுது அர்த்தங்களைக் கொடுக்கும்.

மேலும், கஷ்டங்களையே சந்தித்த உள்ளத்திற்கு நன்றி என்ற குணம் நிறைய இருக்கும். மரத்தின் விளிம்பைத் தொட்டவர்களுக்குத்தான் ஒவ்வொரு நாளும் தேவன் கொடுக்கும் ஈவு என்பது புரியும். தன்னவர்களை நீண்ட நாட்கள்பிரிந்திருப்பவர்களுக்குத்தான் குடும்பத்தில் ஒன்றாக வாழும் சிலாக்கியத்தின் மேன்மை என்ன என்பது புரியும். ஆக, கஷ்டப்படும் போது தான் தேவன் நமக்குச் செய்யும் காரியங்களின் மேன்மையை உணர்ந்து நன்றியாய் ஜீவிப்போம். இல்லாவிடில் எத்தனை அனுகூலமான சூழ்நிலை இருந்தாலும் குறைகூறியே வாழ்க்கையைக் கழிக்கிறவர்களாக இருப்போம்.

இன்னொரு காரியம், நாம் துன்பத்தினூடே செல்லும்போது தான் மற்றவர்களின் வருத்தம் புரியும். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள் (எபேசியர் 6:2) என்ற வார்த்தையின்படி நாம் வாழக் கற்றுக்கொள்வோம். கிறிஸ்தவர்களாகிய நாம் உலகப் பாடுகளுக்காக மட்டுமல்லாமல் பரலோகம் செல்வதற்காகவும் நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும்.

கஷ்டமான, பாடுகள் நிறைந்த பாதைகள் வழியே செல்லும் ஒருவர் தான் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ள முடியும். பயத்தினால் குகைகளில் ஒளிந்து திரிந்தபோது தான், தாவீதினால் பல சங்கீதங்களைப் பாட முடிந்தது.

அநியாயமாய் நடத்தப்பட்ட யோசேப்பு பொறுமையாய் அந்த ஏணியில் ஏறி எகிப்திய அரசாங்கத்தின் உயர்பதவியை அடைந்ததோடு பரலோகத் தந்தையின் அருகிலும் சென்று விட்டான்.

நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து கெத்சமனேயில் வியாகுலப்பட்டு, பிறகு பல பாடுகளை அனுபவித்து கொடூரச் சிலுவையில் தொங்கி, மரித்து, இருண்ட குகைக்குள் அடக்கம் பண்ணப்பட்ட போதுதான் யாரும் செய்ய முடியாத உலகத்தின் மிகச் சிறந்த வெற்றியான உயிர்த்தெழுதலை அடைய முடிந்தது.

பக்தன் யோபு தன் பாடுகள் மூலமாக ஆவிக்குரிய பார் வையை பெற்றுக் கொண்டான். பொன்னிலும் விலையேறப்பெற்ற விசுவாசத்தைப் பெற்றுக் கொண்டான். சோதிக்கப்பட்டு பரீட்சை பார்க்கப்பட்ட அவன் விசுவாசம் பொன்னைக் காட்டிலும் மேலானது. யோபுவைப் போன்ற பக்தர்கள் இன்றைக்கும் நமக்கு ஆறுதலாகவும், பெலத்தைக் கொடுக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள்.

ஆக, கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே நாமும்கூட கஷ்டமான சூழ்நிலையின் உள்ளே பிரவேசிக்கப் பயப்பட வேண்டாம். நம் விசுவாசம் சோதிக்கப்பட்டு, பரீட்சை பார்க்கப்பட்டு அந்த ஆலையிலிருந்து வெளியே வரும்போது, மிகவும் பிரகாசமுள்ள பொன் மிளிர்கிறது போல நம் விசுவாசமும் ஜொலித்துக் கொண்டிருக்கும். நம்மைப் பார்த்து மற்றவர்களும் அந்த இரகசியத்தை உணர்ந்து கொள்வார்கள். ஆகவே, பொன்னிலும் விலையேறப்பெற்ற விசுவாசத்தை நாம் பெற்றுக்கொள்ள நமக்கு சோதனையும், பரீட்சையும் அவசியம்.

சகலமும் நன்மைக் கேதுவாக நடக்கும் என்பதின் பொருள் என்ன? குறைகளும், இழப்புகளும், தோல்விகளும், காத்திருக்குதலும், இல்லாமையும் இவையாவும் நாம் அசைக்க முடியாத விசுவாசத்தைப் பெற்று தேவனண்டை கிட்டிச்சேர உதவி செய்யும் காரணிகள் ஆகும். பொறுமையோடே ஓட்டத்தைத் தொடர்வோம். தேவன் தாமே நம்மோடு இருந்து நமக்கு பெலனாயிருப்பாராக! ★

## கிறிஸ்தவர்களுக்கு தேவ ஆலோசனைகள்

- ♦ அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்யுங்கள் (கலா. 5 : 13)
- ♦ ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லுங்கள் (கொலோ. 3 : 16)
- ♦ முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள் (1 பேதுரு 4 : 9)
- ♦ ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள் (யாக்கோபு 5 : 16)

வாலிபர் பகுதி

# வாலிபனே நீ எதைத் தேடிக்கொண்டிருக்கிறாய்?

சகோ. பென்னி மார்ட்டீன்

பிரியமான வாலிபர்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நல் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாக மறுபடியும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். மனிதர்களாகிய நாம் இப்பூமியில் வாழும் வாழ்க்கையின் அர்த்தத்தைக் கண்டுபிடிக்க பல நூற்றாண்டுகளாக முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், நமக்கு முன்பு வாழ்ந்த மனிதன் எண்ணற்ற காரியங்களைக் கண்டுபிடித்திருக்கிறான். மேலும், இந்த விஞ்ஞான உலகில் நாம் சற்றும் கற்பனை செய்து பார்க்க முடியாதவைகளை எல்லாம் மனிதன் கண்டுபிடித்திருக்கிறான் என்றுதான் சொல்கிறேன். ஆனால், மனிதன் இத்தனை காரியங்களையும் சத்தமின்றி கண்டுபிடித்திருந்தாலும், வாழ்க்கையின் அர்த்தத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தோல்வியையே தழுவியிருக்கிறான்.

குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்கிற டார்வின் கொள்கையையெல்லாம் நம்மால் நம்ப முடியாது. இவ்வுலகில் வாழ்ந்த அநேக தத்துவ ஞானிகள் வாழ்க்கையின் அர்த்தம் பற்றி பல தத்தவங்களை உதிர்த்திருக்கிறார்கள். ஆனால்,வாழ்க்கையின் அர்த்தத்தை சாலொமோன் ஞானியைப்போல் எந்த ஒரு மனிதனாலும் கண்டறிந்து கூறியிருக்க முடியாது. இஸ்ரவேலின் சிங்காசனம் அதன் முழுவல்லமையிலும் கம்பீரத்திலும் இருக்கும்போது சாலொமோன் அரசன் அரியனையில் அமர்ந்தார். சலொமோனுக்கு ஞானம், செல்வம், புகழ் போன்றவைகள் ஏராளமாக, தாராளமாக இருந்தன. இவைகளின் மத்தியில் சாலொமோன் ராஜா வாழ்க்கைக்கான அர்த்தத்தைத் தேடினார். இது பிரசங்கி புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவர் இவ்விதமாக எழுதினார் மாயை மாயை எல்லாம் மாயை என்று சூரியனுக்குக் கீழே மனுசன் படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுக்குப் பலன் என்ன? ஒரு சந்ததிபோகிறது, மறுசந்ததி வருகிறது, பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது (பிரசங்கி 1: 2- 4).

நான் இவ்வுலகத்தை விட்டுப்போன பிறகு, எனக்கு என்ன பயன் உண்டாகும்? நான் என்ன வித்தியாசத்தை ஏற்படுத்துவேன்? இது போன்ற கேள்விகள் மனித ஆத்துமாவுக்கு, பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருக்கிறது. சலொமோன் ராஜா உலக சிற்றின்பங்களினால் வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடினார். அவருடைய கண்டுபிடிப்புகள் எல்லாம் முக்கியத்துவம் வாய்ந்தவைகள். ஏனென்றால், அவர் மட்டுமே உலகத்தின் சிற்றின்பங்கள் எல்லாவற்றிலும் சிறந்தவைகளை முழுமையாக அனுபவித்தார். இந்த உலகில் எந்த ஒரு மனிதனும் அவரைப் போல் எல்லாவற்றையும் விரும்பிய வண்ணம் அனுபவித்ததில்லை. எனவே, அவர் வாழ்க்கையின் அர்த்தத்தை எந்தெந்த கோணங்களில் தேடியிருக்கிறார் என்பதை அலசிப்பார்த்து நாமும் வாழ்க்கையின் அர்த்தம் என்ன என்பதைக் கண்டுகொள்வோம்.

**I. சாலொமோன் வாழ்க்கையின் அர்த்தத்தை ஞானத்தில் தேடினார்.**

இராஜாக்கள் மூன்றாம் அதிகாரத்தில் சாலொமோன் ஞானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எந்த முயற்சியையும் எடுக்கவில்லை. அவர் தேவனிடம் கேட்டார் தேவன் அதை அவருக்கு ஈவாகக் கொடுத்தார். ஆனால், தேவனால் கொடுக்கப்பட்ட ஞானமாக இருந்தாலும் கூட தேவனுக்கு சேவை செய்ய அது பயன்படாவிட்டால் வாழ்க்கைக்கான அர்த்தத்திற்கு விடைகான முடியாது என்று சாலொமோன் சொல்கிறார். அதாவது, உலகக் கல்வியல் மட்டும் விடைகாண முடியாது என்று சாலொமோன் சுருக்கமாகச் சொல்கிறார். அதிக சலிப்புண்டு அறிவு பெருத்தவன் நோவுப் பெருத்தவன் (பிரசங்கி 1 : 18). கல்வி வாழ்க்கையின் ஒரு பகுதியே தவிர அதுவே வாழ்க்கையின் அர்த்தத்தைக் கண்டறிய உதவி செய்யாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**II. சாலொமோன் வாழ்க்கையின் அர்த்தத்தை செல்வத்தில் தேடினார்.**

சாலொமோன் ராஜா செல்வச் செழிப்பாக வாழ்ந்தார். அவர் தன் அரண்மனை முழுவதையும் கட்டி முடிக்கப் பதிமூன்று வருடம் ஆனது. அந்த அரண்மனையின் ஆடம்பரத் தோற்றத்தைப் பற்றி 1 இராஜாக்கள் ஏழாம் அதிகாரத்தில் நாம் வாசிக்க முடியும். இது இன்றைய அம்பானி மற்றும் பில்கேட்ஸ்களின் மாளிகைகளை விட ஆடம்பரமானது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். அதுமட்டுமல்ல பூமியின் சகல ராஜாக்களைப் பார்க்கிலும் ராஜாவாகிய சாலொமோன் ஐசுவரியத்திலும் ஞானத்திலும் சிறந்தவனாயிருந்தான் என்று வேதவசனம் சொல்கிறது (2ராஜாக்கள் 10 : 23).

செல்வத்தின் வாயிலாக வழ்க்கையின் அர்த்தத்தைத் கண்டறிய முற்பட்ட சாலொமோனின் வார்த்தைகளைக் கவனியுங்கள், **பணப்பிரியன்**

**பணத்தால் திருப்தியடைவதில்லை** இதுவும் மாயையே. பொருள் பெருகினால் அதைத் தின்கிறவர்களும் பெருகுகிறார்கள் அதை உடையவர்கள் தங்கள் கண்களினால் அதைக் காண்பதேயன்றி அவர்களுக்குப் பிரயோஜனம் என்ன? ( பிரசங்கி 5 : 10,11 ).

### III. சாலொமோன் வாழ்க்கையின் அர்த்தத்தை பெயரிலும் புகழிலும் தேடினார்.

சில மக்கள் இந்த உலகத்தில் வாழும்போது பேரும், புகழும் பெற்றால் மட்டுமே தாங்கள் முழுமையடைந்ததாகக் கருதுகிறார்கள். அதைவிட மகிழ்ச்சி வேறு எதிலுமில்லை என்று சொல்கிறார்கள்.

அப்படிப் பார்த்தால் சாலொமோன் ராஜா இஸ்ரவேல் தேசத்தை ஆட்சிசெய்த நாட்கள் மிகச் செழிப்பான நாட்கள். அந்நாட்களில் அவர் புகழின் உச்சியில் இருந்தார். அவருடைய ராணுவச் செலவினங்கள் அதிகமானது. சாலொமோனிடத்தில் ஆயிரத்து நானூறு இரதங்கள் இருந்தன. பன்னீராயிரம் குதிரை வீரரும் இருந்தார்கள். அங்கே ஆச்சரியம் என்னவென்றால் அவரோடு போர் செய்ய யாருமில்லை. எல்லா தேசங்களும் அவரை மதித்து அவருக்கு மரியாதை கொடுத்தன. அவரிடம் கப்பம் செலுத்தப்பட்டது (1 ராஜாக்கள் 10 : 22-26 ). சேபாவின் ராணி சாலொமோனின் கீர்த்தியைக் கேள்விப்பட்டு அவரை சந்தித்திருக்கிறாள் (1 ராஜாக்கள் 10 : 1 - 9).

அவருக்குக் கிடைத்த பணத்திலும், புகழிலும் அவர் திருப்தியடையவில்லை. அவர் வெறுமையானவராகவே உணர்ந்து வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடிக்கொண்டிருந்தார். வாழ்க்கையையே வெறுத்தவராய் அவர் சொல்லும் வார்த்தைகளைக் கவனியுங்கள். **ஆகையால், இந்த ஜீவனை வெறுத்தேன், சூரியனுக்குக்கீழே நான் பட்டப்பிரயாசத்தையெல்லாம் வெறுத்தேன். இதுவும் மாயையே** என்று சொல்கிறார் (பிரசங்கி 2 : 15-23).

கடைசியாக, சாலொமோன் வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடுவதில் விடை கண்டு விட்டார். அந்த விடையை அவருடைய வார்த்தைகளிலேயே கேட்டோம் காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே ( பிரசங்கி 12 : 13 ). எனவே வாலிபச் செல்வங்களே! நாம் இவ்வுலகில் வாழ்வதற்கான நோக்கமே, தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளை கைக்கொள்வதற்காகத்தான் என்பதைப் புரிந்துகொண்டோம் அல்லவா? அப்படிச் செய்யும்போது நம் வாழ்க்கை ஓர் அர்த்தம் நிறைந்ததாக இருக்கும். ★

சிறுவர் பகுதி

# நாதாபும், அபியூவும்

Bro. ஏபில் நாயகம்

எனக்குப் பிரியமான சிறு தம்பி தங்கைகளே உங்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். யாவரும் நலமாக இருக்கிறீர்கள் என நம்புகிறேன். இந்தச் சிறுவர் பகுதியின் மூலம் நீங்கள் கற்றுக்கொள்ளும் பாடங்கள் உங்களுக்குப் பிரயோஜனமாக இருக்கும் என நம்புகிறேன். இந்த மாதத்திற்கான பாடம் என்னவென்று பார்க்கலாமா?

பழைய ஏற்பாட்டில் மூன்றாவது புத்தகமாகிய லேவியராகமம் பல காரியங்களைக் கொண்ட ஒரு புத்தகம். தேவனுடைய ஜனமாகிய இஸ்ரவேல் ஜனம் எப்படி தேவனுக்குப் பிரியமாக வாழ வேண்டும் எப்படி தேவனை சேவிக்க வேண்டும் என்று பல காரியங்கள் இந்த புத்தகத்தில் உள்ளது. தேவனை சேவிக்கும் வேலை லேவி கோத்திரத்திற்குக் கொடுக்கப்பட்டது.

நாதாபும், அபியூவும் மோசேயின் சகோதரனாகிய ஆரோனின் குமாரர்கள். இந்த இருவரிடமிருந்து தான் இந்தமாதத்திற்கான பாடத்தை கற்றுக்கொள்ளப் போகிறோம்.

லேவி 10 : 1-7 ல் என்ன நடக்கிறது? ஆரோனின் குமாரர்கள் கர்த்தருடைய சந்நிதியில் வந்தார்கள். வசனம் 1-யை நன்றாகக் கவனியுங்கள். **கர்த்தர் தங்களுக்கு கட்டளையிடாத அந்நிய அக்கினயைக் கொண்டு வந்தார்கள்** என்று வாசிக்கிறோம். ஏற்கெனவே, அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் வரும்பொழுது என்னவெல்லாம் செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தது. ஆனாலும், அவைகளுக்கு நாதாபும் அபியூவும் கீழ்ப்படியவில்லை.

அப்படி அவர்கள் கீழ்ப்படியாமல் போனதினால் அவர்களுக்கு அப்பொழுதே தண்டனை கிடைத்தது. தேவன் அவர்களைப் பட்சித்தார், அவர்கள் மரித்துப்போனார்கள். தேவனுக்கும் அவர் கட்டளைகளுக்கும் கீழ்ப்படியாமல் போனதினால் அவர்கள் மரிக்க வேண்டியதாயிருந்தது.

பிள்ளைகளே! எப்படி தேவனைத் தொழுதுகொள்ள வேண்டும் என்ற உண்மையான உபதேசம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்று அநேகர் தங்கள் விருப்பத்திற்கேற்றபடி தேவன் கட்டளையிடாத காரியங்களைச் செய்து தேவனைப் பிரியப்படுத்த நினைக்கிறார்கள். அவர்கள் நாதாப் அபியூவைப் போல செய்கிறார்கள். நாம் அப்படியிராமல் இச்சிறு பிராயத்திலிருந்து தேவன் என்ன சொல்லியிருக்கிறாரோ அதற்கு மட்டும் கீழ்படிந்து அவருக்குப் பிரியமாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும் சரியா? ★

# டெங்கு காய்ச்சல்

Bro. ஏபில் நாயகம்

### 1. டெங்கு காய்ச்சல் என்றால் என்ன?

இது டெங்கு வைரஸ் கிருமியால் ஏற்படும் ஒருவகை காய்ச்சல் ஆகும்.

### 2. டெங்கு காய்ச்சல் எப்படிப் பரவுகிறது?

டயர், பயன்படுத்தாத உடைந்த சிமெண்ட் தொட்டிகள், நீண்ட காலமாக கழுவப்படாத தொட்டிகள் போன்றவற்றில் தேங்கும் நீரில் உருவாகும் ஏடிஸ் கொசுக்கள் டெங்கு வைரசுடன் உருவாகுகிறது. இந்த கொசுக்கள் கடிக்கும் போது டெங்கு காய்ச்சல் ஏற்படுகிறது. டெங்கு காய்ச்சல் உள்ளவரை கடித்த ஏடிஸ் கொசு ஆரோக்கியமானவர்களை கடிக்கும் பொழுது ஒருவரிடமிருந்து மற்றவருக்கு பரவுகிறது.

கொசு மூன்று வாரங்கள் உயிர்வாழும். இந்த மூன்று வாரகாலத்தில் ஒருகொசு நல்ல நீரில் நூற்றுக்கணக்கான முட்டைகளிட்டு இனப்பெருக்கம் செய்கிறது. இவ்வாறு குறுகிய காலத்தில் பல்லாயிரக்கணக்கான கொசுக்கள் உருவாகின்றன.

### 3. டெங்கு காய்ச்சல் எப்படிப் பரவாது?

தண்ணீர், காற்று, எச்சில், இருமல், தும்மல் மற்றும் தொடுதல் மூலமாக ஒருவரிடமிருந்து மற்றவருக்கு இந்நோய் பரவாது.

### 4. டெங்கு காய்ச்சலின் அறிகுறிகள் யாவை?

காய்ச்சல், சோர்வு, தலைவலி, உடல்வலி, வாந்தி, எலும்பு வலி ஆகியவை இந்த நோயின் முக்கியமான அறிகுறிகள் ஆகும்.

இரத்த தட்டு செல்கள் இரத்தம் உறைவதற்கு மிக முக்கியமான காரணியாகும். டெங்கு வைரஸ் இரத்தத்தட்டு, இரத்த செல்களை அழித்துவிடும் தன்மையுடையது.

இரத்தத்தட்டுகள் எண்ணிக்கை குறையும்போது, அது நுரையீரல், வயிறு போன்ற உறுப்புகளிலும், பல், ஈறு, சிறுநீர்ப் பாதையிலும் இரத்தக்கசிவை ஏற்படுத்தக்கூடும்.

### 5. பாதிக்கப்பட்டவர்களை எவ்வாறு கவனித்துக்கொள்வது?

காய்ச்சலுக்கு மருத்துவர்கள் கொடுக்கும் மருந்துகளை உரிய நேரத்தில் சாப்பிட வேண்டும்.

டெங்கு காய்ச்சல் உடலில் நீர்ச்சத்தைக் குறைத்துவிடும். உப்பு சேர்த்த கஞ்சி, இளநீர் மற்றும் மருத்துவமனையில் கொடுக்கப்படும் உயிர்காக்கும் ஓஆர்எஸ் போன்ற திரவப்பத உணவு தேவையான அளவு கொடுக்க வேண்டும்.

## நிலவேம்புக் குடிநீர் :

10 கிராம் நிலவேம்புக் குடிநீர் சூரணத்தை எடுத்து 100 மில்லி நீருடன் கலந்து கொதிக்க வைத்து பாதியாக சுருக்கி, வடிகட்டி 50 மில்லி வீதம் நாளொன்றுக்கு காலை மற்றும் மாலை இருவேளைகள் அருந்தி வரவும்.

ஒவ்வொரு முறையும் புதிதாக தயாரித்துக் கொள்ளவும்.

இதன் மூலம் காய்ச்சல் ஐந்து நாட்களில் தணிந்து விடும்.

காய்ச்சல் தணிந்த பிறகும் இதனை மேலும் இரண்டு நாட்களுக்கு அருந்த வேண்டும்.

நிலவேம்புக் குடிநீர் அனைத்து அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள சித்த மருத்துவப் பிரிவுகளில் விலையேதுமின்றி கிடைக்கும்.

## பப்பாளி இலைச்சாறு :

புதிதாக பறித்த இலைகளில் உள்ள காம்புகளை அகற்றிவிட்டு சிறிது தண்ணீர் ஊற்றி அரைத்து அல்லது இடித்து வடிகட்டி 10 மில்லி வீதம் நாளொன்றுக்கு 4 முறை அருந்த வேண்டும்.

இவ்வாறு அருந்தினால், 5 நாட்களில் காய்ச்சல் தணிந்து விடும். காய்ச்சல் தணிந்த பிறகும் இதனை மேலும் 2 நாட்களுக்கு அருந்த வேண்டும்.

## நியாயத்தீர்ப்பு நாள் ஆச்சரியங்கள்

- ♦ உண்மையாகவே நியாயத்தீர்ப்பு என்று ஒன்றிருக்கிறது என்பதை எல்லோரும் உணர்ந்து கொள்வார்கள் (எபிரெயர் 9 : 27)
- ♦ கிறிஸ்துவின் சத்திய வசனத்தின்படி நியாயந்தீர்க்கப்படுவதை எல்லாரும் காண்பார்கள் (யோவான் 12 : 48)
- ♦ ஒட்டுமொத்த மனித இனமும் அங்கே காணப்படும் (2 கொரி. 5 : 10)
- ♦ அந்த நாளில் யாருக்கும் இராண்டாவது வாய்ப்பு கொடுக்கப்படமாட்டாது (லூக்கா 16 : 14)
- ♦ அந்த நாளில் அவரவருடைய கிரியைக்குத்தக்கதாய் அவரவர்க்குப் பலனளிக்கப்படும் (ரோமர் 2 : 6)

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை நவம்பர் மாத இதழில்)**

1. கர்த்தர் மோசேயை எங்கிருந்து கூப்பிட்டார்?
2. இதில் உள்ள அதிகாரங்களும் வசனங்களும் எத்தனை?
3. பலிகளில் மீதியானது யாரைச் சேரும்?
4. எத்தனை நாள் ஆசரிப்புக்கூடாரத்தை காவல் காக்க வேண்டும்?
5. ஆசாரியன் தன் அங்கியை எதனால் செய்யவேண்டும்?
6. அந்நிய அக்கினியைக் கொண்டுவந்தவர்கள் யார்?
7. ஆரோனின் மீதியாயிருந்த குமாரர்களின் பெயர் என்ன?
8. நீங்கள் பரிசுத்தராயிருங்கள் என்று தேவன் ஏன் சொன்னார்?
9. விருத்தசேதனம் எந்த நாளில் பண்ணப்பட வேண்டும்?
10. அக்கினி புறப்பட்டு கொழுப்பை எரித்தபோது ஜனங்கள் என்ன செய்தார்கள்?

(லேவியராகமத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள்!)

## செப்டம்பர் மாத வினாக்களுக்கான விடைகள்

1. சாட்சியின் இரண்டு பலகைகள் (31:18)
2. வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள் (32:9)
3. யோசுவா (33:11)
4. மூன்றுதரம் (34:23)
5. இருதயம் ஞானஎழுப்புதல் அடைந்த ஸ்திரீகள் (35:26)
6. ஞான இருதயமுள்ள யாவரும் (36:8)
7. கிருபாசனம் (37:18)
8. ஆறுலட்சத்து மூவாயிரத்து ஐநூற்றி ஐம்பது (38:26)
9. சேக்கல், கேரா (30:13)
10. பாவம் செய்தவர்கள் (31:18)

## சரியான பதில் எழுதியவர்கள்

1. சாலொமோன் தனம்-காங்கயம்
2. வளர்மதி ராஜ்குமார்-காங்கயம்
3. ஜெசிந்தா அருள்-காங்கயம்
4. செல்வமணி குணசேகரன்-சென்னை
5. V.S.S. பால்ராஜ்-மதுரை
6. S. ஜெயராஜ்-பொள்ளாச்சி
7. J. ஜெமீலா செல்லையா-நெல்லை
8. இந்திரா ஜெபக்கனி-நாசரேத்
9. ஜெபதாய்-நாசரேத்
10. மாலதி-மூலனூர்
11. V.C. ரூபவல்யா-தூத்துக்குடி
12. S. ஜோதி சுதா-திருச்சி
13. M. செல்வம்-வெள்ளலூர்
14. G. பாக்கியம் சம்பூரணம்-ஈரோடு

# வேதாகம கேள்வி - பதில்

**கேள்வி :** தேவன் எப்படிப்பட்டவர்?

**பதில் :** இக்கேள்விக்கான பதிலை யாரும் முழுமையாக எடுத்துக் கூற முடியாது! இதை விவரிக்கும்படியான அளவுக்கு மனித ஞானமும், கால அவகாசமும் இவ்வுலகில் இல்லை. தேவனைப் பற்றிய காரியங்களை நாம் அறிந்திருந்தபோதிலும், அவர் முடிவில்லாதவர், நித்தியமானவர். அவர் அநாதி தேவனாயிருக்கிறபடியால் அவருடைய ஒட்டுமொத்த தன்மையை நாம் முழுமையாக ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாது.

**தேவனுக்கே உரித்தான சில குணாதிசயங்கள்**

தேவன் மாறாதவர், சர்வ ஞானமுடையவர், சர்வவல்லவர், சர்வ வியாபி, நீதியுள்ளவர், பரிசுத்தர், நல்லவர், பாவிகளாகிய மனுக்குலத்தின் மீது மிகுந்த இரக்கமுள்ளவர். இப்படிப்பட்ட இன்னும் அதிசயதக்கவிதமான குணாதியசங்களைக் கொண்டவராக தேவன் திகழ்கிறார். மேலும், தேவன் ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் (2பேதுரு 3:9). இன்னுமாக, 1யோவான் 4:8-ம் வசனம் தேவன் அன்பாயிருக்கிறார் என்று கூறுகிறது. தேவனைப் பற்றிய ஓர் அற்புதமான அன்பை லூக்கா 15 : 11 - 32-ம் வசனப்பகுதியில் நாம் காணலாம். இந்த வேதபகுதியில் தேவன் தமது பிள்ளைகளை மிகுந்த அன்போடும் அக்கறையோடும் கவனித்து, தனக்கு எதிராக அவர்கள் செய்கிற காரியங்களை மன்னிக்கச் சித்தமுள்ளவராயிருக்கிறார்.

**தேவன் நல்லவராகவும் கண்டிப்பானவராகவும் இருக்கிறார்.**

தேவன் தம்மில் நிலைத்திருக்கிறவர்களுக்கு நல்லவரும் கீழ்ப்படியாதவர்களுக்குக் கண்டிப்பானவராகவும் இருக்கிறார். அவர் ஒரு நாளில் கிறிஸ்துவைக் கொண்டு நமது கிரியைகளின்படி நம்மை நியாயந் தீர்ப்பார் (வெளி 20 : 12 ; அப் 17 : 31) தேவனை ஒருவர் அதிகமாக அறிந்து கொள்வதற்கு, ஆழமாகவும் நிதானமாகவும் அவருடைய வார்த்தைகளைத் தியானிப்பது அவசியம். அப்பொழுது நாம் நீதியுள்ள சிங்காசனத்தில் வீற்றிருந்து தீர்ப்பு செய்கிறவருக்கு முன்பாக நாம் நிற்கும்போது வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள் என்பார் (மத்தேயு 25:34). பரலோக ராஜ்யத்தைச் சுதந்தரிக்கும் படியாக அவருடைய உபதேசத்தில் நிலைத்திருப்போம். நம்மை நீதியின் பாதையில் வழிநடத்த தேவன் வல்லவராயிருக்கிறார். ★

# நாளையத்தினம்... கவலைப்படும்!

Bro. பாண்டியன்

**ஆ**ண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக கிறிஸ்துவின் உபதேசத்தில், மலைப்பிரசங்கத்தில் முக்கியமான கருத்துக்களில் ஒன்றுதான் மனுஷர் நாளையத் தினத்தைக் குறித்துக் கவலைப்படக்கூடாது என்பது. மேலும், நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும் என்றும் ஆண்டவர் எடுத்துரைக்கிறார். நாளையத்தினம் எப்படிக் கவலைப்படும் என்று கேட்டால் சங்கீதம் 19:2 ல் பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது. இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது என்று காண்கிறோம். பகல், தேவனுடைய படைப்புகளை நமக்கு அறிவிக்கிறதுபோல, நாளையத்தினம் கவலைப்படுவதும் சாத்தியமே. தேவசித்தப்படி மனுஷன் நடவாதபோது நாளையத்தினம் கவலைப்படக் கூடும். தேவனுடைய மனுஷன் தேவன் மீது விசுவாசம் வைத்து நாளையத்தினத்தை எதிர்கொள்ள வேண்டியவன். வேஷமாகவே மனுஷன் திரிகிறான், விருதாவாகவே சஞ்சலப்படுகிறான் என சங்கீதக்காரன் சொல்லுகிறார் (சங். 39:6) தொடர்ந்து அவர் பாடும்போது, நான் எதற்கு எதிர்பார்த்து இருக்கிறேன்? நீரே என் நம்பிக்கை என்கிறார்.

மனுஷர் கடுந்தொல்லையில் அகப்படும்படி, தேவன் பாவிகளுக்கு நியமித்திருப்பதாக பிரசங்கி சொல்கிறான் (பிர.1:13,2:26). ஆக, தொல்லைகள் அனைவருக்கும் வரும் என்றாலும் அதை எதிர்கொள்வதில் விசுவாசிகளாகிய நாம் எப்படி இருக்க வேண்டும் என்பதே முக்கியமாகும். கவலைகள் ஏன் கூடாது என்று பார்க்கும்போது, அது நாம் ஆவிக்குரிய வளர்ச்சியைத் தடைசெய்கிற ஒன்றாய் இருக்கிறது. முட்செடிகளுக்குள் விழுந்த விதை பலன் தராதபடி போவதுபோல தேவ வசனப்படி நாம் நடவாதபடிக்கு இந்த உலகக் கவலைகள் தடை செய்கின்றன! பிரசங்கி அதைப்பற்றிக் குறிப்பிடும்போது வாழ்வுகாலத்தில் நன்மையை அனுபவித்திரு, தாழ்வு காலத்தில் சிந்தனைசெய்! மனுஷன் தனக்குப் பின்வருவதைக் கண்டுபிடியாதபடிக்கு இதை எதிரிடையாக வைத்திருக்கிறார் என்கிறான். நம் வாழ்க்கையில் தாழ்வு வரும்போது துவண்டு போகாமல், நாம் தேவனுடைய வார்த்தைகளைச் சிந்திக்க வேண்டும். விசேஷமாக தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தங்களைச் சிந்திக்க வேண்டும். சிங்கக்குட்டிகள்

தாழ்ச்சியடைந்தாலும் கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது (சங்.34:10). அதையே நம் ஆண்டவர் முதலாவது **தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்** என்றார் (மத்தேயு 6:33).

சரி, கர்த்தரைத் தேடுதல் என்றால் என்ன என்று பார்ப்போம். 2நாளாகமம் 14-ம் அதிகாரத்தில் ஆசா ராஜா விக்கிரகங்களை அகற்றி கர்த்தரைத் தேடினதாகப் பார்க்கிறோம். நாமும் நம்மிடமுள்ள ஆகாத காரியங்களை அகற்றத் துணிந்தால் மட்டுமே நாம் கர்த்தரைத் தேடுகிறதாக அர்த்தப்படும். அதேவண்ணம் யோசபாத் ஆபத்து நேரிட்டபோது கர்த்தரை உபவாசித்துத் தேடினபோது தேவன் வெற்றியைக் கட்டளையிட்டார் (2நாளாகமம் 20-ம் அதி). நாமும் நம் வாழ்வில் அநேக ஆபத்துகளைக் கடந்து செல்கிறோம். நாமும் அந்த ராஜாவைப் போல், கர்த்தர் பேரில் நம்பிக்கை வைத்து ஜெபிக்கும் போது, தேவன் நம்மையும் அற்புதவிதமாய் தப்புவிப்பார். அடுத்ததாகக் கர்த்தரைத் தேடுதல் என்பது, அவரை சபையாகக்கூடி ஆராதிப்பதைக் குறிக்கிறது. பிரிந்து சென்ற யெரோபெயாம் லேவியரைத் தள்ளிவிட்ட போது அவர்கள் திரும்பிவந்து எருசலேமில் தேவனுக்குப் பலியிட்டு தொழுதுகொண்டார்கள் (2நாளகமம் 11:16) நம்மையும் இந்த உலகம் வெறுத்தாலும் நம்மை நேசித்து தம் குமாரனையே கொடுத்த அன்பின் தேவனைத் தவறாமல் தொழுது கொள்வோம். அதன் மூலம் நாம் தேவனைத் தேடுகிறோம். தேவன் நம் எல்லா பயத்துக்கும் நீங்கலாக்கி விடுவார் (சங். 34:4).

**இருதயத்தின் கவலை அதை ஒடுக்கும், நல்வார்த்தையோ அதை மகிழ்ச்சி ஆக்கும் என்று** (நீதி. 12:25) வேதத்தில் காண்கிறோம். நம் **இருதயம்** பற்றி ஆண்டவர் குறிப்பிடுகையில் **முழு இருதயத்தோடும் தேவனிடம் நாம் அன்புக்கூர வேண்டும்** என்கிறார். அந்த இருதயத்தில் நாம் நாளையதினக் கவலைகளை அனுமதித்தால், அது நம்மை தேவனிடமிருந்து பிரித்துவிடும். எனவேதான், லௌகீகக் கவலைகள் மரணத்தைப் பிறப்பிக்கும் என்கிறார் பவுல் அப்போஸ்தலன் ( 2கொரி. 7:10). அதேசமயம், நல்வார்த்தை என்பது தேவனுடைய வேதத்தையே குறிக்கும். ஏனெனில் 119-ம் சங்கீதம் 14-ல் திரளான செல்வத்தில் களிகூருவது போல் நான் உமது சாட்சிகளின் வழியில் களிகூருகிறேன் என்றும் 92-ல் உமது வேதம் என் மனமகிழ்ச்சியாய் இராதிருந்தால் என் துக்கத்தில் அழிந்துபோயிருப்பேன் என்பதாகக் காண்கிறோம். எனக்கன்பான விசுவாசியே வேதம் உன்

மனமகிழ்ச்சியாய் இருக்கட்டும். அதுவே, நமக்கு திரளான செல்வத்திற்கு ஒப்பாக இருக்கிறது. தேவன் இஸ்ரயேல் ஜனம் பற்றிக் குறிப்பிடுகையில் (ஓசியா 8:12) என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக் கொடுத்தேன். அவைகளை அந்நியக் காரியமாக எண்ணினார்கள் என்று வருத்தப்படுகிறார்.

நாம் ஏன் நாளையத்தினத்தைப் பற்றிக் கவலைப்படக்கூடாது என்பதற்கு இன்னுமொரு முக்கிய காரணம், நாளையத்தினம் நம் தேவனுடைய கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது. இது நமக்கு ஒரு பெரிய ஆறுதலான விஷயமாகும். உதாரணத்திற்கு, யோர்தான் நதி பிரவாகித்து வரும் ஒரு பெரிய நதியாகும். அதை கடக்க முடியாமல் இஸ்ரவேல் ஜனம் பயந்து நின்றபோது, தேவன் யோசுவாவிடம் சொன்னது நான் மோசேயோடே இருந்ததுபோல உன்னோடும் இருக்கிறேன் என்று ஜனங்கள் அறிவார்கள் என்றார். நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார் என்று யோசுவா ஜனங்களிடம் சொல்லி உற்சாகப்படுத்தினான் ( யோசுவா 3:5 ). அப்போது, மோசே வழிநடத்தின போது செங்கடல் பிரிந்ததைப்போல திரளான வெள்ளமாக ஓடிவந்த யோர்தான் அப்படியே நின்று அந்த ஜனங்களுக்கு வழியை விட்டது. எனக்கன்பான தேவப்பிள்ளையே! இன்று நாம் தேவனிடம் விசுவாசம் வைத்தால் நாளையத்தினத்தில் நடப்பதை தேவன் அற்புதமாக நடத்துவார். ஆனால், நாளை இந்நேரம் சமாரியாவின் பஞ்சம் முடிவுக்கு வரும் என்று சொன்ன எலிசாவின் வார்த்தையை அந்த ராஜாவின் பிரதானி நம்பாதபோது மறுநாள் அவன் ஜனங்களின் கால்களால் மிதிபட்டு சாகும் போது கர்த்தரின் வார்த்தை நிறைவேறினதைப் பார்த்துவிட்டே செத்தான்.

ஆகவே, நாமும் அவிசுவாசமாய் இருப்போமானால் நாளையத்தினக் கவலைகள் நம்மை ஆட்கொண்டு விடும். இயேசுவானவர் தம் சொந்த ஊருக்கு வந்தபோது, அவர்களுடைய அவிசுவாசத்தினால் அங்கே அவர் அநேக அற்புதங்களைச் செய்யக்கூடாமற் போயிற்று என்று பார்க்கிறோம். நம் அவிசுவாசமே தேவனுடைய ஆசீர்வாதங்களை நமக்குக் கிடைக்காமல் போகச் செய்யும். நாம் கவலைகளில் மூழ்கிக் கொண்டிருக்கும்போது நம்மைக் கரம்பிடித்துத் தூக்கிவிடக் கர்த்தர் ஆயத்தமாயிருக்கிறார் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். சந்தேகப்படுவோமானால் பேதுரு போல நாமும் (கவலை) சமுத்திரத்தில் மூழ்க நேரிடும் என்பதை மறக்கக்கூடாது.

அப்போது ஆண்டவர் நம்மையும் பார்த்து அற்பவிசுவாசியே! ஏன் சந்தேகப்பட்டாய் என்று கேட்பார் (மத்தேயு 14: 31). வனாந்திரத்திரத்தில் மன்னாவையும் கன்மலைத் தண்ணீரையும் கொடுத்து போஷித்த அதே தேவனைத்தான் நாம் இன்றும் ஆராதிக்கின்றோம். அவருடைய குமாரனாகிய கிறிஸ்து இன்று நம்மைப் பார்த்து, நீங்கள் ஏன் உணவு உடைக்காகக் கவலைப்படுகிறீர்கள்? என்று கேட்கிறார். இவர் 5 அப்பங்களை 5000 பேருக்கு கொடுத்தவரல்லவா? அதினால், நம் ஆண்டவர் வார்த்தைகளை ஏற்று தேவனிடம் விசுவாசம் வைத்து (யோவான் 14 : 1 ), நாளையத்தினத்தைக் குறித்து நாம் கலங்காமல் விசுவாசமாய் இருப்போம். தேவன் நம்மை அஞ்ஞானிகளாக அல்ல, கிறிஸ்துவின் மூலமாய் தம்முடைய பிள்ளைகளாக நம்மைக் கவனித்து போஷிக்க ஆயத்தமாய் இருக்கிறார். அவரைத் தேடி ஒரு நன்மையும் குறைவுபடாமல் வாழ தேவன் கிருபை செய்வாராக. ஆமென்! ★

## நாளும் நடப்பும்

- **வங்கி சேமிப்பு கணக்கில் டிசம்பர் 31-க்குள் ஆதார் எண் இணைக்க வேண்டுகோள்**
  **- ரிசர்வ் வங்கி**
- **எஸ்சி, எஸ்டி மாணவர்களுக்கான உயர்கல்வி உதவித் தொகை குறைப்பு**
  **- தமிழக அரசு**
- **அதிக எடை சரக்குப் போக்குவரத்துச் சேவை அஞ்சல் துறையில் அறிமுகம்**
  **- தலைமை அஞ்சல்துறை அதிகாரி**
- **நீட் போராட்டத்துக்கு எதிரான வழக்கு முடித்து வைப்பு**
  **- உச்சநீதிமன்றம்**
- **டெங்குவைக் கட்டுப்படுத்த தமிழகத்தில் உள்ள உணவகங்களில் நிலவேம்பு குடிநீர் வழங்க உத்தரவு**
  **- சுகாதாரத் துறை**

# விசுவாசமே நம்முடைய ஜெயமாயிருக்கிறது

☆☆☆☆☆ **Bro. Randall Caseman** ☆☆☆☆☆

**நம்**முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் (1 யோவான் 5:4) விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயருக்கிறது (எபி. 11:1). ஒரு மொழியாக்கம் இவ்விதமாகச் சொல்கிறது. விசுவாசமானது நம்பப் படுகிறவைகளின் நிச்சயமும், காணப்படாதவைகளின் உறுதியாயிருக்கிறது. இன்று மத உலகில் விசுவாசத்தைப் பற்றி அதிகமாகப் பேசப்படுகிறது. விசுவாசம் என்பது என்ன? எது விசுவாசமல்ல? என்பது பற்றி பரவலாகப் பேசப்படுகிறது. கிறிஸ்தவர்களாக இந்தப் பாடத்தைப் பற்றி நாம் புரிந்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

தேவனைப் பற்றிய அறிவுதான் விசுவாசம். தேவனை அறியாமல் எந்த வேதாகம விசுவாசமும் இருக்க முடியாது. அறியாமை என்பது விசுவாசத்திற்கு எதிர்மறையானதும், சத்துருவுமாக இருக்கிறது. அறிவின் விளைவுதான் நம் விசுவாசம். ஆதலால், விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் (ரோமர் 10:17). அவர் உண்டென்று நாம் விசுவாசிக்க வேண்டுமென்று எபி. 11:6 சொல்கிறது. தேவன் மீது விசுவாசமில்லாமல் உண்மையான வெற்றிகரமான வாழ்க்கை வாழ்வது என்பது முடியாத காரியம். அதை முயற்சி செய்து கூட பார்க்க வேண்டாம்.

**மனரீதியாக ஏற்றுக்கொள்வது தான் விசுவாசம்:**

விசுவாசம் என்பது, தேவனை தேவனாகவும், எல்லாவற்றையும் விட உயர்ந்தவர், இப்பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தவர், ஜீவனைத் தருபவர், இரட்சிப்பைத் தருபவர் என ஏற்றுக் கொள்வதாகும். ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் (ஆதி. 1:1) அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம் ( 17:28 ). தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் என்று (யோவான் 3:16). அநேகர் தேவனை அறிந்திருக்கிறார்கள். ஆனால், அவரை எல்லாவற்றையும் விட மேலானவர், சர்வ அதிகாரம் படைத்தவர் என்பதை ஏற்றுக்கொள்ளத் தவறுகிறார்கள்.

நமக்கு வேதாகமம் தெரியும், நாம் நம் உதடுகளினால் தேவனை சர்வ அதிகாரம் உடையவர் என்பதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், நம் இருதயங்களினால் அவரை நம்புகிறோமோ என்பதைக் குறித்து நிச்சயமில்லாமல் இருக்கிறோம். அவர்கள் தங்கள் உதடுகளினால் என்னைக் கனப்படுத்துகிறார்கள், அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாயிருக்கிறது (மத்தேயு 15:8). ஆம், நோவாவின் இரட்சிப்பு, ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள், இஸ்ரவேலின் விடுதலை, தாவீதின் நம்பிக்கை, எலியா காகங்களால் போஷிக்கப்பட்டது, கலிலேயக் கடல் அமர்த்தப்பட்டது பற்றி எல்லாம் நமக்கு தெரியம். ஆனால், தேவன் நம் ஜீவியங்களில் கிரியை செய்ய அவரை அனுமதிப்பதில் நாம் குறைவுபடுகிறோம். விசுவாசம் என்பது நமது அன்றாட வாழ்க்கையில் தேவனை நம்புவதாகும். நண்பர்களே! தேவன் நம்முடைய எல்லாவற்றையும் முடிவு பரியந்தம் பார்ப்பார். எனவே, அவரை நம்புங்கள். அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் (எபி. 11:6).

**கீழ்படிவது தான் விசுவாசம் :**

விசுவாசமானது தேவனுடைய சித்தத்தின்படி செயல்பட ஏவப்படாதவரை அது முழுமையாவதில்லை என்பதை எப்போதாவது வேதாகமத்தை வாசிப்பவர் கூட அறிவார். விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேலான பலியைச் செலுத்தினார் (எபி. 11:4). விசுவாசத்தினாலே ஏனோக்கு தேவனோடு நடந்தான் (எபி. 11:5). விசுவாசத்தினாலே நோவா பேழையை உண்டு பண்ணினார் (எபி. 11:7). விசுவாசத்தினாலே ஆபிரகாம தான் அழைக்கப்பட்ட போது கீழ்ப்படிந்தான் ( எபி. 11:8 ). நாம் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் (எபேசியர்2:8). கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தார். ஆனால், எல்லோருமே இரட்சிக்கப்படமாட்டார்கள். உலகம் முழுவதற்குமான இரட்சிப்பு என்று வேதாகமத்தில் எதுவும் போதிக்கப்படுவதில்லை. எல்லோரும் என்ன செய்யும்படியாக கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்களோ அதையே நாம் தனிப்பட்ட முறையில் செய்ய வேண்டும். இதை, இயேசுகிறிஸ்து சிறப்பாகச் சொன்னார். நான் என் பிதாவின் சித்தத்தைச் செய்ய வந்தேன் என்று. யாக்கோபு இவ்விதமாகச் சொல்கிறார். கிரியை இல்லாத விசுவாசம்

செத்ததாயிருக்கிறது (யாக். 2:17). பிசாசுகள் தேவனைப் பற்றி அறிந்திருக்கின்றன, தேவனை எல்லாவற்றையும் விட மேலானவராக ஒத்துக்கொள்கின்றன. ஆனால், தேவனுடைய கற்பனைகளை அவைகள் கைக்கொள்வதுமில்லை, கீழ்ப்படிவதுமில்லை, நறுங்குண்ட இருதயமுமில்லை. நாம் வேதாகமத்தை வாசித்து விட்டு விசுவாசம் செயல்படுகிற விசுவாசமாக இருக்கிறது என்பதைக் காணாமல் இருக்கமுடியுமா? இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான். நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாம். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் (1யோவான். 5:1,3,4).

**பாவக்குற்றத்தின் மீது விசுவாசம் நம் ஜெயமாக இருக்கிறது.**

அவர்கள் இருளை விட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தை விட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும் பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார் ( அப். 26:18). சோதனையின் மீது விசுவாசம் நம் ஜெயமாக இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள் (எபேசியர் 6:16).

**அறியாமையின் மீது விசுவாசம் நம் ஜெயமாக இருக்கிறது:**

கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும் (2தீமோ. 3:15).

**பொறுமை இல்லாமை மீது விசுவாசம் நம் ஜெயமாக இருக்கிறது.**

உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள் (யாக். 1:3). ஜெபத்தில் விசுவாசம் நம் ஜெயமாக இருக்கிறது. ★